**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.729/2022 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.2** -ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திரு.ஜிதேந்திரா, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்தி | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.2 : முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் வந்துள்ளேன். இந்த வழக்கில் வாதி எனது தம்பி ஆவார். எனது அம்மா பெயர் S.திலவகவதி அப்பா பெயர் A.சிவம் என்ற சிவஞானம் ஆகும். எனது பெற்றோருக்கு நானும், இந்த வழக்கின் வாதியும் தான் பிள்ளைகள். எனது தம்பியான இந்த வாதியின் பெயர் S.செந்தில் ஆகும். அவருடைய பெயர் A.செந்தில்குமார் என்பது பொய். எனது அப்பாவின் வாரிசு சான்றிதழின் எனது தம்பியான வாதியின் பெயர் செந்தில் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாரிசு சான்று என தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி வாரிசு சான்று **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்படுகிறது. அதில் எனது அப்பாவின் பெயர் A.சிவம் என்ற A.சிவஞானம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தம்பியான வாதியின் ஜாதி சான்றிதழ் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சா.ஆ** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் எனது தம்பியான வாதியின் பெயர் செந்தில் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தம்பியான வாதியின் பள்ளி மாற்று சான்றிதழ் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சா.ஆ** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலும் எனது தம்பியான வாதியின் பெயர் செந்தில் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தம்பி 11 ம் வகுப்பு வரை தான் படித்துள்ளோர், M.B.A படிக்கவில்லை. APARAJIT TRADS நிறுவனமானது என்னுடையதாகும். மேற்படி நிறுவனம் எனது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் FORM B CERTIFICATE OF REGISTRATION தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் வங்கி கணக்கு IDBI BANK-ல் என்னுடைய பெயரில் தான் உள்ளது. மேற்படி வங்கி கணக்கில் படிவம் **சா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தம்பியான வாதியின் 10 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சா.ஆ** 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலும் எனது தம்பியான வாதியின் பெயர் செந்தில் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.